மருத்துவமனைக்கும், ராயப்பேட்டை மருத்துவமனைக்கும் கொஞ்சம் load shift செய்து அங்கிருக்கும் Paediatrics Wing -லே இந்த load கொஞ்சம் அவர்கள் எடுத்துக்கொண்டால், Children Hospital லே மட்டும் பெரிய load இருக்காது என்ற அளவிலே பகிர்ந்து எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருப்பதால், மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் இந்த விளக்கத்திற்குப் பிறகு திருப்தியடைவார்கள் என்று நம்புகிறேன். ஆகவே, மேலவைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைத்து, இதை விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்று சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இப்பொருள் குறித்து அவையை ஒத்திவைத்து விவாதிக்கத் தேவையில்லை என்று கருதி என் அனுமதியை மறுக்கிறேன்.

(முற்பகல் 11-10)

3. அறிவிப்புகள்.

பேரவையிலிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, சட்ட மன்ற மேலவையின் இசைவிற்காக, மாண்புமிகு பேரவைத் தலைவரால் கையெழுத்திடப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கீழ்க்காணும் சட்ட முன்வடிவுகளின் பிரதிகளை, மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன் :

(1) தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு நிலவரி வசூல் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1981).

(2) 1981 ஆம் ஆண்டு பத்திரப்பதிவு (தமிழ் நாடு திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1981).

(3) தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு கால்நடை நோய்கள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1981).

(4) தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு வீட்டு வசதி வாரிய (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1981).